# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION – **LANGUAGES**

SECOND SEMESTER – **APRIL 2022**

UTL 2101 – GENERAL TAMIL – II **(2021 BATCH)**

Date: 21-06-2022 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00 PM - 04:00 PM

| | | | |
|---|---|---|---|
| | **பகுதி - அ** | | |
| | **அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.** | | |
| *1.* | **பின்வரும் பாடல் வரிகள் இடம்பெற்ற நூல், நூலாசிரியர் பெயர்களைக் குறிப்பிடுக.** *(5 x 1 = 5)* | | |
| அ | நன்னாரில் பூட்டிய சூத்திரப்பாவை நல்<br>நார் தப்பினால் தன்னாலும் ஆடிச் சலித்திடுமோ? | *K1* | *CO1* |
| ஆ | தேடக் கிடைக்காத திரவியமே தேன்கடலே<br>ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே... | *K1* | *CO1* |
| இ | வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்<br>போரில் சிறந்து பொலிவாகும்..... | *K1* | *CO1* |
| ஈ | அன்னை தந்தைக்குச் செய்யும் அருங்கைமாறு உளதோ அம்மா... | *K1* | *CO1* |
| உ | ஆதிமலை எங்களுக்கு ஏதன்மலை யம்மே<br>ஆண்டவனார் எங்களைத்தாம் அமைத்தமலை யம்மே... | *K1* | *CO1* |
| *2.* | **கோடிட்ட இடத்தை நிரப்புக.** *(5 x 1 = 5)* | | |
| அ | பட்டினத்தாரின் சமாதி _______________ல் அமைந்துள்ளது. | *K1* | *CO1* |
| ஆ | சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற பெயரில் ____________ போற்றப்படுகிறார். | *K1* | *CO1* |
| இ | தமிழ்ப்புதினத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் _______________. | *K1* | *CO1* |
| ஈ | சவேரியாருக்குக் கோட்டாற்றில் கோயில் கட்டிய வரலாற்றைக் கூறும் நூல் _______________. | *K1* | *CO1* |
| உ | செய்தி வாக்கியத்தின் இறுதியில் வருவது __________. | *K1* | *CO1* |
| *3.* | **பொருத்துக.** *(5 x 1 = 5)* | | |
| அ | பிள்ளைத்தமிழ் - வீரனைப் பாடுவது | *K2* | *CO1* |
| ஆ | கலம்பகம் - எழுவகைப் பெண்கள் | *K2* | *CO1* |
| இ | பள்ளு - 10 பருவம் | *K2* | *CO1* |
| ஈ | உலா - உழத்திப்பாட்டு | *K2* | *CO1* |
| உ | பரணி - 18 உறுப்பு | *K2* | *CO1* |
| *4.* | ***சரியா ? தவறா ?*** *(5 x 1 = 5)* | | |
| அ | பட்டினத்தார் துறவு மேற்கொண்டு முதலில் பக்தராகவும், பின்பு யோகியாகவும் விளங்கினார். | *K2* | *CO1* |
| ஆ | மஸ்தான் சாகிபு இளமையிலேயே குர்ஆன் மற்றும் சமய சாத்திரங்களைக் கற்றுணர்ந்து சமயக் கல்வி அறிஞர் பட்டம் பெற்றார். | *K2* | *CO1* |
| இ | நந்திக்கலம்பகம் ஐந்தாம் நந்திவர்மன் மீது பாடப் பெற்ற நூலாகும். | *K2* | *CO1* |
| ஈ | வேதநாயக சாத்திரியார் தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னருக்கு உற்ற நண்பராக விளங்கியவர். | *K2* | *CO1* |

| | | | |
|---|---|---|---|
| உ | செய்திகள் நேற்றுதான் கிடைத்தது. | K2 | CO1 |
| **பகுதி – ஆ** | | | |
| **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு 100 சொற்களில் விடையளிக்க. (2 x 10 = 20)** | | | |
| **5.** | திருமந்திரத்தில் அமைந்துள்ள வாழ்வியல் கருத்துகளை விவரித்துரைக்க. | K3 | CO2 |
| **6.** | மூதுரையில் ஔவையார் வெளிப்படுத்தும் சிந்தனைகளை விளக்கியுரைக்க. | K3 | CO2 |
| **7.** | பிள்ளைச் சிறு விண்ணப்பத்தின் வழி இராமலிங்க அடிகள் கூறும் செய்திகளை எடுத்துரைக்க. | K3 | CO2 |
| **8.** | நந்திக்கலம்பகத் தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்துவதையும் கவிஞரின் கையறு நிலையும் குறித்து விளக்கி எழுதுக. | K3 | CO2 |
| **பகுதி – இ** | | | |
| **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு 100 சொற்களில் விடையளிக்க. (2 x 10 = 20)** | | | |
| **9.** | இடைக்காலப் புலவர்களின் இலக்கியப் பங்களிப்பை விரித்துரைக்க. | K4 | CO3 |
| **10.** | தமிழரின் வானவியல் சிந்தனைகள் கட்டுரை உணர்த்துவனவற்றை விளக்குக. | K4 | CO3 |
| **11.** | தமிழும் கணினியும் என்னும் கட்டுரையில் அமைந்துள்ள கருத்துகளை விவரிக்க. | K4 | CO3 |
| **12.** | நாளிதழில் வெளியான வேலை வாய்ப்பு விளம்பரத்தைக் கண்டு கடிதம் ஒன்று எழுதுக. | K4 | CO3 |
| **பகுதி – ஈ** | | | |
| **ஏதேனும் ஒரு வினாவிற்கு 250 சொற்களில் விடையளிக்க. (1 x 20 = 20)** | | | |
| **13.** | ஆண்டாள் கண்ட கனவை நாச்சியார் திருமொழி வாயிலாக மதிப்பீடு செய்க. | K5 | CO4 |
| **14.** | முத்தொள்ளாயிரம் உணர்த்தும் மூவேந்தர்களின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க. | K5 | CO4 |
| **பகுதி – உ** | | | |
| **ஏதேனும் ஒரு வினாவிற்கு 250 சொற்களில் விடையளிக்க. (1 x 20 = 20)** | | | |
| **15.** | சிற்றிலக்கியங்களின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க. | K6 | CO5 |
| **16.** | தமிழரும் விளையாட்டும் என்னும் கட்டுரை வெளிப்படுத்தும் சிந்தனைகளை எடுத்துரைக்க. | K6 | CO5 |

&&&&&&&&&&&